**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**
**03 .09.2019 ம் தேதி செவ்வாய்க் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற அவசர கூட்டத்தின் பொருட்கள்**
**தலைமை– திரு.பா.நாராயணன்.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)**

1) கூடலூர் நகராட்சியில் **156.06** கி.மீ நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. கூடலூர் நகராட்சிக்குட்பட்ட சாலைகள் இயற்கை இடர்பாடுகள் காரணமாக பழுதடைந்த சாலைகளை உடனடியாக சரி செய்ய வேண்டி இருப்பதால் முக்கியமான தார்சாலைகள் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் மூலம் **2019–2020–**ம் ஆண்டில் தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**3.00** கோடி செலவில் சரி செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் நிர்வாக அனுமதி வழங்க நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| **1** | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **3, 5, 6, 8, 9, 14,15,18** மற்றும் **21** முதன்மை அஞ்சலக சாலை, குசுமகிரி சாலை, பள்ளிப்படி சாலை, சளிவயல் சாலை, மஞ்சமூலா சாலை, அத்திபாளி முதல் கொக்ககாடு சாலை, விமலகிரி முதல் மொத்தவயல் சாலை, விமலகிரி சாலை முதல் நாயக்கம்பாடி சாலை வரை, விமலகிரி சாலை முதல் மங்குழி சாலை வரை, கிரீன்வேல் சாலை, மார்த்தோமா நகர் முதல் கொங்கன்வயல் சாலை வரை மற்றும் செலுக்காடி சாலையை மேம்படுத்துதல். | **300.00** |

**அலுவலக குறிப்பு–**
**1)** அனுமதி வழங்கலாம்
**2)** மேற்படி பணிகளை தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் மானிய நிதியிலிருந்து ரூ.**0.60** கோடியாகவும், மாநில நிதிக் குழு / மத்திய நிதிக்குழு/நில அபிவிருத்து கட்டணம் மானிய நிதியிலிருந்து ரூ.**1.80** கோடியாகவும், மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.**0.60** கோடியாகவும் பணியினை மேற்கொள்ளலாம்.
**3)** மேற்கண் பணியை மாநில செய்தி மலரில் ஒப்பந்த புள்ளியை விளம்பரம் செய்ய அனுமதி வழங்கலாம்.

2) **12.07.2019** அன்று ஒப்பந்த அடிப்படையில் **5** ஓட்டுனர் பணியாளர்களை சப்ளை செய்ய மாவட்ட ஆட்சியரின் குறைந்த ஊதிய நிர்ணய செயல்முறையின்படியும் நகராட்சியின் நிபந்தனைகளுக்குட்பட்டு பணியாளர்களை சப்ளை செய்ய கீழ்கண்டவாறு **2** ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டுள்ளது பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | நாள் ஒன்றுக்கு ESI மற்றும் EPF ஒரு நபருக்கு |
|---|---|---|
| **1** | திரு.உசைன்.M<br>க.எண்.**12/998**,CD<br>முதல் மைல்,கூடலூர் | ரூ.**821/–** |
| **2** | திரு.ராஜேஸ்.K<br>க.எண்.**20/256**<br>முதல் மைல், கூடலூர் | ரூ.**1021/–** |

மேற்கண்ட **2** ஒப்பந்த புள்ளிகளில் வரிசை எண் **1** ல் கண்ட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.உசைன்.M என்பவருக்கு உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு – 01.07.2019** முதல் **30.06.2020** வரை ஓராண்டு காலத்திற்கு மாவட்ட ஆட்சியரின் குறைந்த ஊதிய நிர்ணய செயல் முறை உத்திரவின் பேரில் செலவினம் மேற்கொள்ளவும் நகராட்சி அனைத்து சட்ட விதிகளுக்குட்பட்டு உத்திரவு வழங்கிட அனுமதிக்கலாம்.

32) கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விளம்பரங்களை முறைப்படுத்துதல் மற்றும் விளம்பர பலகைகள் நிறுவ அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் **31.01.2019** தேதிய அரசாணை (நிலை) எண்.17 உத்திரவின்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவதற்கு கீழ்கண்டவாறு கட்டணங்கள் நிர்ணயம் செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>கட்டண விபரங்கள்</u>

| | | |
|---|---|---|
| விண்ணப்ப கட்டணம் | – | ரூ.1000/– |
| உரிமக் கட்டணம் | – | நெடுஞ்சாலை துறை சாலைக்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.8000/– |
| | – | நகராட்சி சாலைக்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.4000/– |
| நிலத்திற்கு வருடாந்திர வாடகை | – | ஒரு சதுர மீட்டருக்கு ரூ.2000/– |

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

**ஆணையாளர்(பொ)**
**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**

**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**
**03 .09.2019 ம் தேதி செவ்வாய்க் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற அவசர கூட்டத்தின் பொருட்கள்**
**தலைமை— திரு.பா.நாராயணன்.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)**

கூடலூர் நகராட்சி எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் விளம்பரங்களை முறைப்படுத்துதல் மற்றும் விளம்பர பலகைகள் நிறுவ அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் **31.01.2019** தேதிய அரசாணை (நிலை) எண்.17 உத்திரவின்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவதற்கு கீழ்கண்டவாறு கட்டணங்கள் நிர்ணயம் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**கட்டண விபரங்கள்**

| | | |
|---|---|---|
| விண்ணப்ப கட்டணம் | — | ரூ.1000/— |
| உரிமக் கட்டணம் | — | நெடுஞ்சாலை துறை சாலைக்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.8000/—<br>நகராட்சி சாலைக்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.4000/— |
| நிலத்திற்கு வருடாந்திர வாடகை | — | ஒரு சதுர மீட்டருக்கு ரூ.2000/— |

**அலுவலக குறிப்பு—** அனுமதி வழங்கலாம்

**ஆணையாளர்(பொ)**
**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**

**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**
**30.09.2019 ம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற சாதாரண கூட்டத்தின் பொருட்கள்**
**தலைமை– திரு.பா.நாராயணன்.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)**

1) இந்நகராட்சி வார்டு எண் 21 மெதவந்தகொல்லி பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்க நகர்மன்றத்தில் தீர்மானம் எண் 422 நாள் 30.6.2015 அன்று பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தடுப்புச்சுவர் பணிகள் மேற்கொள்ளும் போது இப்பகுதிக்கு தடுப்புச்சுவர் அமைப்பதற்கு பதிலாக யாணைசெத்தக்கொல்லி சாலையிலிருந்து மெதவந்தகொல்லிக்கு செல்லும் சாலை பழுதடைந்துள்ளதாலும் இச்சாலையில் பள்ளிவாகனங்கள் மருத்துவமனைக்கு செல்ல இச்சாலை பயன்படுத்துவதால் சாலையை சீரமைக்க கோரி ஊர்பொதுமக்கள் கேட்டு கொண்டதற்கிணங்க தடுப்புச்சுவர் அமைப்பதற்கான மதிப்பீட்டை மாற்றி மதிப்பீட்டு தொகையின் ரூ.10.00 இலட்சத்திற்கு சாலை அமைப்பதற்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்து இப்பணிகளை விரைந்து முடிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு – 1)** அனுமதி வழங்கலாம்
**2)** இதே ஒப்பந்ததாரர் மூலம் இப்பணிகளை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகைக்குள் இப்பணியினை மேற்கொள்ளலாம்

2) இந்நகராட்சிக்கு சொநத்மான ஆய்வு மாளிகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் உதகை அவர்கள் மற்றும் தலைவர் அவர்கள் ஆய்வு மாளிகை தங்கி பணிமேற்கொள்ளும் நேரத்தில் சமையல் செய்ய வேண்டி உள்ளதால் சமையலறைக்கு தேவையான பொருட்கள் வாங்க ஆகும் செலவினத் தொகை ரூ.35000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

3) கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலான்மை திட்டம். டெங்கு காய்ச்சல் ஒழிப்பு, மழைநிர் சேகரிப்பு மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து விழிப்புணர்வினை நாடகம் மூலம் பொது மக்கள் அறியும் வகையில் அரசினர் மேல்நிலைப்பள்ளி மற்றும் நகராட்சி காந்தி திடல் ஆகிய இரண்டு பகுதிகளிலும் 31.07.2019 ம் தேதி நடத்தியதற்கான உத்தேச செலவினம் ரூ.13000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

4) இந்நகராட்சிக்கு சொந்தமான பாரதிதாசன் வணிக வளாகம் மற்றும் கோ ஆப்டெக்ஸ் வளாகம் இப்பகுதிகளில் மழை காரமாக நீர் கசிவு ஏற்பபட்டு கட்டிடத்தின் மேற்கூரையில் விரிசல் வருகிறது என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதால் இக்கட்டிடங்கள் மேற்கூரையில் Prepainter galvanized iron sheet அமைக்க பணிகளை மேற்கொள்ள தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை 10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

5) மாநில தேர்தல் ஆணையர் கடிதத்தின்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கான நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன் தலைவருக்கான தேர்தல் நடத்த ஆயத்தப்பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் கூடலூர் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் வாக்காளர் படிவம் தயாரித்தல் மற்றும் நகல் எடுத்தல் அதற்கான எழுதுப் பொருட்கள் மற்றும் தேர்தல் செலவினங்களுக்கான தொகை செலவிடுதல் போன்ற பணிகளுக்காக தேர்தல் செலவினம் மேற்கொள்ள ரூ.3000000/– தோராயமாக தேவைப்படுவதால் மேற்கண்ட செலவினத்திற்கான அனுமதி வேண்டி மன்றத்தில் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** வாக்காளர் பட்டியல் தயாரித்தல், எழுது பொருட்கள் வழங்குதல் மற்றும் அவசர

நிமித்த செலவினங்களுக்கு தேர்தல் செலவினங்களுக்கும் தோராயமாக ரூ.**30.00** இலட்சம் மேற்கொள்ளவும் மேலும் மேற்காணும் செலவினங்களைவிட அதிகம் ஏற்படும் செலுவினங்களுக்கு திருத்திய மன்ற பொருள் வைத்துக் கொள்ளவும் அனுமதிக்கலாம்.

6) இந்நகராட்சியின் பொறியியல் பிரிவிற்கு சொந்தமான குடிநீர் வாகனம் TN 43 Z 5433 ற்கு 7 டயர்கள் முற்றிலும் தேய்ந்த நிலையில் உள்ளதால் வாகனத்திற்கு 7 டயர்கள் ரீபெல்ட் செய்ய குறைந்த விலைப்புள்ளி கோரிய திருவாளர்.டயர்பிளக்ஸ், செம்பாலா, கூடலூர் நிறுவனத்தில் பணி செய்யவும் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பணிகள் | M/S.டயர் பிளக்ஸ், செம்பாலா, கூடலூர் | M/S பாப்புலர் டயர்ஸ், கூடலூர் | M/S.பவர்பின் டயர்ஸ், கூடலூர் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியின் பொறியியல் பிரிவிற்கு சொந்தமான குடிநீர் வாகனம் TN 43 Z 5433 ற்கு 7 டயர்கள் ரீபெல்ட் செய்ய | **ரூ.34650/–** | **ரூ.36050/–** | **ரூ.36925/–** |

**அலுவலக குறிப்பு –1)** அனுமதி வழங்கலாம்

**2)** வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திருவாளர்.டயர்பிளக்ஸ், செம்பாலா, கூடலூர் அவர்களின் விலைப்புள்ளி தொகை ரூ.**34650/–** ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

7) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு Tata Ace வாகனம் TN 43 X 1824 ன் **4** டயர்களும் தேய்மானம் அடைந்து புதுப்பிக்க இயலாத நிலையில் உள்ளதால் அவசர அவசியம் கருதி **4** புதிய டயர்கள் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.**15000/–** ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**அனுமதி வழங்கலாம்

8) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு Tata Ace வாகனம் TN 43 X 1825 ன் **4** டயர்களும் தேய்மானம் அடைந்து புதுப்பிக்க இயலாத நிலையில் உள்ளதால் அவசர அவசியம் கருதி **4** புதிய டயர்கள் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.**15000/–** ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**அனுமதி வழங்கலாம்

9) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு Tata Ace வாகனம் TN 43 X 8275 ன் **4** டயர்களும் தேய்மானம் அடைந்து புதுப்பிக்க இயலாத நிலையில் உள்ளதால் அவசர அவசியம் கருதி **4** புதிய டயர்கள் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.**15000/–** ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**அனுமதி வழங்கலாம்

10) கூடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்குட்பட்ட உரக்கிடங்கில் உள்ள MCC அரவை எந்திரத்தை இயக்க தற்பொழுது திறன் மிக்க பணியாளர்கள் மாடும் இல்லாததால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி 7 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல் முறை ந.க.எண்.**8431/2019**/பி2 நாள் **08.07.2019** ன்படி குறைந்த பட்ச ஊதிய சட்டம் **1948** ன் கீழ் குறைந்த ஊதியம் **(2019–2020)** ம் ஆண்டிற்கான சந்தை நிலவரப்புள்ளியின் படி 7 திறன்மிக்க பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து கொள்ளவும் அவர்களுக்கான ESI,EPF பிடித்தம் செய்யவும் அதற்கான ஏற்படும் செலவின தொகை ரூ.**16.00** இலட்சத்திற்கு நியமணம் செய்யும் நாளிலிருந்து ஒராண்டு காலத்திற்கு பணியமர்த்தி கொள்ள ஆணையரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** உரக்கிடங்கிற்கு தேவையான 7 பணியாளர்களை ஒராண்டு காலத்திற்கு நியமித்து கொள்ளவும் அதற்கு ஏற்படும் செலவினங்களுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

11) கூடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் தற்பொழுது பராமரிப்பில் உள்ள TATA Ac Auto - 12, Mini Auto-1Compact-1 ஆகிய **14** வாகனங்களுக்கு தற்பொழுது நிரந்தர பணியிடங்கள் **2** மட்டுமே உள்ள நிலையில் மீதமுள்ள **12** வாகனங்களை இயக்க பராமரிக்க போதுமான பணியாளர்கள் இல்லத்தால் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.**8431/2019**/கூ**2**, நாள் **08.07.2019** ன் குறைந்தபட்ச ஊதியம் சட்டம் **1948** ன் கீழ் **2019–2020** ம் ஆண்டிற்கான சந்தை நிலவர அடிப்படையில் 7 ஒட்டுநர் பணியிடங்களை பணி நியமனம் செய்யும் நாட்கள் முதல் ஒராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து கொள்ள அனுமதியும் அதற்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ.**21.00** இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல் முறை ந.க.எண்.**8431/2019**/பி2 நாள் **08.07.2019** குறைந்தபட்ச ஊதிய சட்டம் **1948** ன் கீழ் **2019–2020** ம் ஆண்டு சந்தை நிலவர அடிப்படையில் 7 ஓட்டுநர் பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் ESI மற்றும் EPF பிடித்தங்களுடன் அரசு மற்றும் இதர விடுமுறை நாட்கள் நீங்கலாக நியமித்து கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

12) G.O(Ms) No.101 Municipal Administration and Water Supply (ME3) Dept Dated.30.04.1997 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் K.Dis.No.**33182**/P3 **2016** நாள்.**08.06.2017**–ன் படி மூன்றாண்டுகளுக்கு தனியார் ஒப்பந்ததாரர் மூலம் **80** துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகர்மன்ற தீர்மானம் எண்.**198** நாள்.**31.10.2017**–ன்படியும் கூடலூர் நகராட்சி பகுதியில் உள்ள **21** வார்டுகளுக்கும் திடக்கழிவு மேலான்மை திட்டத்தின்கீழ் **80** துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்ய ஒப்பந்த புள்ளி கோரியதில் திருவாளர்.அட்சயா அசோசியேட்ஸ். **4/128**, வி.ஒ.சி. நகர், கூடலூர் என்பவருக்கு **01.11.2017** முதல் **31.10.2018** வரை உள்ள ஓராண்டு காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் குறைந்தபட்ச ஊதியச்சட்டம் **1948**–ன் கீழ் சந்தை நிலவர கூலி அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்து பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்ட நிலையில் மேற்படி நிறுவனத்தாருக்கு **01.11.2017** முதல் **31.10.2018** வரை ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் அன்னாரின் ஒப்பந்த காலம் **31.10.2018** உடன் முடிவடைந்ததால் திருவாளர்.அட்சயா அசோசியேட்ஸ் நிறுவனத்தாருக்கு மேலும் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை சப்ளை செய்ய இசைவு கடிதம் கோரப்பட்டது. அதற்கு அன்னாரால் **25.09.2018** அன்று இசைவு கடிதம் வழங்கியதை நகர்மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.**214** நாள்.**29.08.2018** அன்று அனுமதி

வழங்கப்பட்டதை தொடர்ந்து திருவாளர்.அட்சயா அசோசியேட்ஸ் நிறுவனத்தாருக்கு 01.11.2018 முதல் 31.10.2019 வரை அனுமதி வழங்கப்பட்டது. இந்நிலையில் ஒப்பந்த காலம் 31.10.2019 உடன் முடிவடைவதால் திருவாளர்.அட்சயா அசோசியேட்ஸ் அவர்களை 01.11.2019 முதல் 31.10.2020 வரை மேலும் ஓராண்டு காலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்ய இவ்வலுவலக ந.க.எண்.2202/2019/எச்1 நாள்.16.09.2019 ல் இசைவு கடிதம் வழங்க கேட்கப்பட்டது. அதற்கு அந்நிறுவனத்தாரால் 18.09.2019 அன்று இசைவு கடிதம் வழங்கியுள்ளார். எனவே நிர்வாக நலன் கருதி 01.11.2019 முதல் 31.10.2020 வரை உள்ள ஓராண்டு காலத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்பித்து உரிய உத்திரவு வரும் வரை திருவாளர்.அட்சயா அசோசியேட்ஸ் அவர்களை துப்புரவு பணியாளர்களை சப்ளை செய்ய அனுமதிக்கவும் அதற்கான செலவினம் ரூ.200.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 01.11.2019 முதல் 31.10.2020 வரை திருவாளர்.அட்சயா அசோசியேட்ஸ் ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தை புதுப்பித்து வழங்கவும் அதற்கான செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ஆணையாளர்(பொ)**
**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**